ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2473/30 - 2026 ජනවාරි මස 30 වැනි සිකුරාදා - 2026.01.30

*2473/30 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்**

**2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1) (இ) மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.**

பி. நந்தலால் வீரசிங்க,
ஆளும் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2026, சனவரி, 30.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் "2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும். அத்துடன் இவ்விதிகள் எத்திகதியில் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்படுகின்றதோ அத்திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்டதும் 2024, யூலை 01 ஆந் திகதியிடப்பட்ட 2391/02 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளியிடப்பட்டதுமான 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் அதன் 4(எ) ஆம் விதியினை நீக்குவதன் மூலம் திருத்தப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய விதியினைப் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

"4(எ) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட படுகடன் பிணையங்களில் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் ; அத்துடன்"

1A - G 46204 - 23 (2026/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*